RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS
DOI: 10.34256/irjt22s64

# பத்துப்பாட்டில் வெளிப்படும் மரபும் பண்பாடும்

## வெ. இரமேஷ்குமார் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், திருவாரூர்-610005, தமிழ்நாடு, இந்தியா.

# Tradition and Culture manifested in the Ten Idylls

## V. Rameshkumar [a, *]

[a] Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur-610005, Tamil Nadu, India

* Corresponding Author: rameshkumar150376@gmail.com

Received: 05-09-2021
Revised: 09-04-2022
Accepted: 18-04-2022
Published: 11-06-2022

Check for updates

**ABSTRACT**

Literature helps to learn about people and to build a cohesive structure of language and community. This article explains at first glance the need to know the land from which such literature originated and its background, discusses the views of scholars on the trinity in general, and explains the end-to-end textual value of grammatical-literary evidence. 'Legacy' is based on 'smuggling' and 'culture' is based on 'spreading'. 'Abduction' is inherited from one another. It has been explained that 'diffusion' stands for color that is visible to all and that culture is different from the traditional state of standing by explaining the norm of literature and genetics. Evidence suggests that the customs, beliefs, religions, rituals, diets, costumes and ornaments, tools, warfare, education, art, and professions of the Tamil people, which describe the period and chronology of the Ten Idylls as scholarly references and form cultural references, are increasingly expressed in Sangam literature in particular.

**Keywords:** Sangam Literature, Heritage, Civilization, Cultural Transactions, Love, Veeram

## முன்னுரை

வரலாறு பெற்றிலாத மக்களைப் பற்றித் தெரிவதற்கு அவர்களுடைய இலக்கியமும் மொழியும் துணைசெய்யும் எனும் கருத்தின் அடிப்படையில் வரலாறு பெற்ற தமிழ்ச் சமூகத்திற்கும் மொழியும் இலக்கியமும் பெரும்துணையாக இருக்கின்றன (Elakkuvanar, 1968). சமூக உருவாக்கம் என்பது சமூதாயத்தின் வரலாற்று வளர்ச்சிப்போக்கின் பல்வேறு காலங்களையும் உள்ளடக்கியதாக அமைகிறது. இவ்வுருவாக்கத்தில் கணிசமான பகுதியை மொழி தனதாக்கிக் கொண்டுள்ளது. மொழியும் சமூகமும் இணைந்ததான கட்டமைப்பை உருவாக்கம் செய்வதற்கு இலக்கியங்கள் பெரும்பங்காற்றுகின்றன. அவ்வகையில் செவ்வியல் தகுதிகொண்ட தமிழ் இலக்கியங்களின் வரலாறு மிக நீண்டகாலத் தொடர்ச்சியைக் கொண்டதாகும். தமிழகத்தில் சங்ககாலம் என அறிஞர்களால் வரையறுக்கப்பட்ட காலத்தில் உருவான இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கைச் சூழலைப் படம்பிடிக்கின்றன. இலக்கியக்கர்த்தாக்கள் வாழ்க்கைச் சூழலில் வெளிப்படும் செயல்பாடுகளைத் தங்கள் இலக்கியங்களில் பதிவேற்றம் செய்கின்றனர். அவை உலகவழக்கிலும் நாடகவழக்கிலும் இணைந்து பதிவேற்றமாகின்றன. அவ்வகையில் பதிவேற்றமாகும் செயல்பாடுகள் தமிழ்ச் சமூகத்தின் மரபுசார் வழியில்நின்று பண்பாட்டுப் பரிவர்த்தனைகளை வெளிப்படுத்துகின்றனவெனக் காணமுனையலாம். அவ்வாறாக வெளிப்படும் மரபுசார் பண்பாட்டுப் பரிவர்த்தனைக் கூறுகள் சங்க இலக்கியப் பத்துப்பாட்டு நூல்களில் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை இக்கட்டுரை நிறுவ முயலுகின்றது.

## தமிழ் நிலம் மற்றும் அதன் இலக்கிய வரலாற்றுப் பின்னணியை அறிவதன் அவசியம்

இன்றளவும் அறிஞர்களால் சங்கத்தமிழ் இலக்கியங்களின் தொன்மை குறித்து உறுதியான வரையறையை வழங்க முடியவில்லை. பி. டி. சீனிவாச ஐயங்கார், சிவராசப்பிள்ளை, நமச்சியவாய முதலியார், கோ. கேசவன், கே. முத்தையா போன்றோர் தமிழ்ச்சங்கம் இருந்ததாகக் கூறுவது முழுப்பொய் என்கின்றனர் (Venkataraman, 2008). மூன்று தமிழ்ச்சங்கங்கள் இருந்தது உண்மையே என்பர் டாக்டர். உ.வே. சாமிநாதய்யர், கா. சுப்பரமணியப்பிள்ளை, கா. அப்பாதுரையார், தேவநேயப்பாவாணர் போன்றோர் (Venkataraman, 2008). ஒரு குழுவினர் கி.மு. 1000 முதல் கி.பி. 300 அல்லது கி.பி.400 வரை என்றும் (Rasamanikkanar, 1947), மற்றொரு குழுவினர் கி.மு. 500 முதல் கி.பி.100 வரையில் உள்ள காலத்தைச் சங்க இலக்கியகாலம் என யூகத்தின் அடிப்படையில் வரையறை செய்கின்றனர் (Srinivasan, 1997). தற்போதைய தரவுகளிலும் பல்வேறு முரண்பாடுகள் இருப்பதாக மொழி மற்றும் மொழியியல் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். முதற்சங்கம் அமைந்ததாகச் சொல்லப்படும் காய்சினவழுதி என்னும் பாண்டிய மன்னனின் காலத்திற்கு முன்பே தமிழ்மொழி இருந்திருக்க வேண்டும். ஆனால், அவ்வரலாற்றைத் தமிழறிஞர்களால் நிலைநிறுத்த முடியவில்லை. மேலும், தமிழக நிலப்பரப்பின் எல்லைகளும் அடிக்கடி மாற்றத்திற்குள்ளாகியுள்ளமை, பல்வேறு நூற்குறிப்புகளின் வழி அறியமுடிகிறது.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்

தமிழ்கூறு நல்லுலகத்து"

என்பது தொல்காப்பியப் பாயிரத்தின் எல்லைவரையறை ஆனால், பழமையான இலக்கியங்கள் எல்லைகளைச் சுருக்கியும் விரித்தும் கூறியுள்ளமை காணலாம் (Ilankumaran, 2018).

"பஃறுளி யாற்றுடன் பன் மலை அடுக்கத்துக்

குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள

வடதிசை கங்கையும் இமயமும் கொண்டு

தென்திசை ஆண்ட தென்னவன் வாழி"

பாண்டிய மன்னர்களில் ஒருவன் பஃறுளி ஆறும் பன்மலைகள் கொண்ட குமரியும் கடல்கோளால் மூழ்கிவிடத் தன் நாட்டின் பரப்பளவினைப் பெருக்கி வடதிசையில் உள்ள கங்கைநதியையும் இமயத்தையும் இணைத்துக்கொண்டு தென்திசையில் ஆண்டான் எனவும்,

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும

தமிழ் வரம்பறுத்த தண்புனல் நல்நாட்டு"

எனவும் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்

தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்

குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்

குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்" (Balasubramanian, 2014)

'முந்நீர் விழவின் நெடியோன்

நன்னீர் பஃறுளி'

"மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வௌவலின்

மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடு இடம்படப்

புலியொடு வில் நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை

வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்"

எனக் கலித்தொகை ஆசிரியர் சோழன் நல்லுருத்திரனார் கூறுகின்றார் (Rasamanikkanar, 2011)

"தென்குமரி வடபெருங்கல்

குணகுட கடலா எல்லை"

"பனிபடு சோலை வேங்கடத்து உம்பர்

மொழிபெயர் தேஎத்தர் ஆயினும்"

"குணகடல் குமரி குடகம் வேங்கடம்"

"இட்ட எள் நிலம்படா வகையின் ஈண்டிய

முட்டிலா மூவறு பாடை மாக்களால்"

எனக் சீவகசிந்தாமணியின் நாமகள் இலம்பகத்தில் 93-வது பாடல் கி. பி 9-ம் நூற்றாண்டில் திருத்தக்கத்தேவரால் பாடப்பெற்றது. இதைப் பின்பற்றும் விதமாக, பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலுக்கு மயிலைநாதர் தாம் எழுதிய உரையில், தமிழ் ஒழிந்த நிலம் 17 எவை என்பதைப் பட்டியலிடுகின்றார்.

"சிங்களம் சோணகம் சாவகம் சீனம் துளுக்குடகம்

கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலுங்கம் கலிங்கம் வங்கம்

கங்கம் மகதம் கவுடம் கடாரம் கடுங்குசலம்

தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமினவையே" (நன்னூல்)

இவ்வாறு பல்வேறு சூழலில் எல்லைகள் தொடர்ந்து மாறுபட்டு வந்துள்ளதை மேற்கூறிய நூற்குறிப்புகளின் மூலம் அறிகிறோம். இதுவும் ஒருவகையில் தமிழர்களின் வரலாற்றை அணுகுகின்றபோது ஏற்படும் தடைகளில் ஒன்றெனக் கூறலாம். பழங்காலத்தில் தமிழகம் தற்போதுள்ள எல்லைகள் அல்லாமல் குமரிமுனை தாண்டிய நிலப்பரப்புகளைப் பெற்றிருந்ததாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இந்திய வரலாற்றைப் பல்லாயிரம் ஆண்டுகள் விரிவாக்கும் சான்றுகள் கடலடியில் கிடைத்தன. தமிழக நிலப்பரப்பின் வரலாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றாலும் இதன் வரலாறு என்னவோ அரசர்களின் வரலாறுகள் வழியிலேயே முன்மொழியப்படுகின்றன (Mounaguru, 2005). அதுபோலவே தமிழ்மொழியின் இலக்கியவரலாறும் தொல்காப்பியத்தின் தோற்றத்திற்குப் பிறகுதான் நிலைநிறுத்தப்படுகிறது (Appadurai, 1956). தொல்காப்பியத்திற்கு முந்தைய இலக்கியவரலாற்றின் உறுப்புகள் கிடைக்கவில்லை. சில செய்திகள் மட்டுமே கிடைக்கின்றன. குறிப்பாக இலக்கியவழிச் சான்றுகள் இல்லை. முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை, அகத்தியம், கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம், நெடுந்தொகை நானூறு, சிற்றிசை, பேரிசை எனப்பல நூல்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றனர் (Mohan & Sokkalingam, 1985). சங்ககால நூல்கள் எல்லாவற்றையும் முச்சங்கங்கங்கள் குறிப்பிடவில்லை. சங்கநூல்கள் தொகுப்புச்சூழலில் கிடைத்தவற்றையே தொகுத்துப் பிற்காலத்தில் சங்கஇலக்கியங்கள் எனப் பெயரிட்டனர். எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் கூட முச்சங்க வரலாற்றில் இடம்பெறவில்லை. நூலின் அமைப்பு, அதன் செய்யுள் நடை, நூலாசிரியர்களின் காலம், நூலில் காணும் செய்திகள் இவற்றைக் கொண்டே சங்ககால இலக்கியங்கள் இவையென அறிஞர்கள் தீர்மானம் செய்து தொகுப்பாக்கினர். நமக்குக் கிடைக்கும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் பெரும்பாலும் கடைச்சங்க நூல்கள் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதிலும் குறிப்பாகப் பத்துப்பாட்டு நூல்கள் கடைச்சங்க காலத்தின் உருவாக்கம் என அறுதியிடுகின்றனர். ஆசிரியப்பாவில் பாடப்பட்ட இவற்றில் முந்தைய கருத்துருவாக்கங்களின் (அகமரபு, புறமரபு) அடிப்படையிலேயே செய்திகள் வெளிப்பட்டுள்ளன. இவற்றில் உள்ள நூல்கள் பல்வேறு காலக்கட்டத்தில் பலதரப்பட்ட புலவர்களால் எழுதப்பட்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பினும் ஒரு காலக்கட்டத் தொகையாக்கங்களாக கருதப்பட்டன. ஆனால்,

இவற்றின் படைப்புக்காலங்கள் வெவ்வேறாக இருந்துள்ளன. அதனாலேயே கவிதையியலுள் பலவித வேறுபாடுகள் காணப்படுகின்றன (Madhaiyan, 2013). இம்மாற்றத்தினால் இடைச்செருகல்கள் ஏற்பட்டு இரண்டாயிரம் ஆண்டுகள் புழக்கத்தில் உள்ளன என்று கூறலாம். பத்துப்பாட்டு காலத்தில் தமிழ்நாடு இருந்த நிலைமை, தமிழர்களின் வாழ்க்கை நிலைமை, அரசியல் நிலைமை, சமுதாய நிலைமை, பழக்க வழக்கங்கள், பண்புகள் ஆகியன தமிழ் இலக்கியங்களில் பிரதிபலிக்கின்றன (Saami Sithambaranar, 1986). அவற்றைக் கொண்டு அக்கால மக்களின் மரபுசார் பண்பாட்டுச் சிறப்புக்களை அறியமுடியும். ஒரு மொழியின்தன்மை, அதன் இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றைக் கொண்டு அம்மொழி வழங்கிவரும் சமுதாயம், பண்பாடு, தேசம் ஆகியவற்றின் தன்மையையும் வரலாற்றையும் அறிந்துகொள்ள முடியும் (Humboldt, 1972). என்ற கூற்றிற்கேற்பத் தமிழ்மொழி பன்னெடுங்காலம் முதற்கொண்டு ஒரு தெளிவான வரலாற்றுத் தொடர்பினைப் பெற்றுவந்துள்ளதை அறியமுடிகிறது. தமிழைத் திட்டமிட்டு ஒரு செவ்வியல் மொழியாக வளர்க்கும் செயல் சங்ககாலத்திற்கு முன்னரே தொடங்கப்பட்டுவிட்டது எனக் கூறுவதும் இங்குப் பொருத்தமானது (Kamil, 1973). அதனால்தான் மரபு விட்டிடாத பண்பாட்டுச் சிறப்புகள் சங்கஇலக்கியங்களில் பரவிக்கிடக்கின்றன என உறுதியாகக் கூறமுடியும். மேற்கூறிய ஆய்வாளர்களின் கருத்துக்களை அடியொற்றி ஆராய்வோமேயானால் ஒரு மரபுசார் பண்பாட்டுச் சமூகத்தின் மொழியாகிய தமிழ் காலம்தோறும் வளர்ச்சிக்கு ஏற்றவாறு தான்சார்ந்த சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளைப் பிரதிபலித்துக் கொண்டே வந்துள்ளது. அவ்வாறு பிரதிபலிக்கப்பட்ட படிநிலைகளாகத் தமிழ்மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சமயம், சடங்குகள், உணவுமுறைகள், உடை மற்றும் ஆபரணங்கள், உருவாக்கிய கருவிகள், போர்முறைகள், கல்வி, கலை, தொழில்முறைகள் ஆகியனவற்றைப் பட்டியலிடலாம். இக்கூறுகள் மற்ற இலக்கியங்களைக் காட்டிலும் சங்கஇலக்கியங்களில் குறிப்பாகப் பத்துப்பாட்டு இலக்கியங்களில் அதிகமாக வெளிப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டும் விதத்தில் இக்கட்டுரை அமைகிறது.

## இலக்கியவழியில் மரபும், பண்பாடும்

மொழியிலக்கணம் கூறும் தொல்காப்பியர் இலக்கணத்தில் மரபுகளை முன்வைப்பது (நூன்மரபு, மொழிமரபு, தொகைமரபு - எழுத்து, விளிமரபு - சொல், மரபியல் - பொருள்) சங்ககாலத்தில் மரபுசார் ஆக்கத்தைப் பின்பற்றினர் என்பதற்கு ஆதாரமாகும். கூடல், இருத்தல், பிரிதல், இரங்கல், ஊடல் என்பன பற்றி எழும் அனுபவங்கள் எல்லா நில மக்களுக்கும் பொதுவானவை. ஆயினும், இவற்றுள் ஒவ்வொன்றையும் வெவ்வேறான நிலப்பிரிவிற்குரிய இயற்கைச்சூழலோடு தொடர்புபடுத்தி வர்ணிப்பது ஒரு இலக்கிய மரபாகிவிட்டது. திணைமரபிற்கேற்ப வழிபாடுகளையும் பாகுபாடு செய்யும்முறை உண்டென்பதைத் தொல்காப்பியத்தின் மூலம் அறிகிறோம் (Pathmanathan, 2007). சங்க நூல்கள் ஒரு கலப்புத்தொகுப்பு என்பது அறிந்தவொன்று. சங்க இலக்கியங்கள் இனக்குழு வரலாற்றை அதிகம் பேசவில்லை என்பதால் சங்கநூல்களிலே காலத்தால் பிற்பட்டவை இனக்குழுத் தலைவர்களுக்கும் முடிமன்னர்களுக்கும் இடையே நடைபெற்ற போர்களைப்பற்றிப் பேசாமல் சேர, சோழ, பாண்டியரிடையே நடைபெற்ற போர்களைப் பற்றியே பேசுகின்றன என அறியலாம். எனவே, சங்க நூல்களின் இறுதிக்காலத்தில் இனக்குழுக்கள் அழிந்து நிலவுடைமையும் மன்னர் ஆட்சியும் தோன்றிவிட்டன என யூகம் செய்யலாம் ஆயினும் தமிழர்கள் மொழிசார்ந்த இனக்குழுவாகவே வாழமுற்பட்டுள்ளனர் (Vaanamaamalai, 1973). 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்' (தொல். எச்ச.400), 'செந்தமிழ் நிலத்தது வழக்கு' (தொல். எச்ச.398), 'தமிழ்கெழு மூவர் காக்கும் மொழிபெயர் தேஎம்' (அகம்.31:14), 'இமிழ் கடல் வேலித் தமிழகம்' (பதிற்.2. பதி.5), 'வையக வரைப்பில் தமிழகம்' (புறம்.168:18), 'தண்டமிழ்ப் பொதுவென பெறாஅன்' (புறம்.57:5), என எல்லைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது மொழியை அடையாளப்படுத்திய மரபு வெளிப்படுகிறது. பருப்பொருள் நோக்கில் தமிழின் இலக்கணமரபும் இலக்கியமரபும் உயர்விற்குரியதாய்த் திகழ்வதாலேயே தமிழை அடையாளப் பெருமையாகக் கருதுகின்றனர் (Sivathambi, 1998).

'மரபு' என்பது 'கடத்துதல்' என்பதைச் சார்ந்தது, 'பண்பாடு' என்பது 'பரவுதல்' சார்ந்தது. 'கடத்துதல்' என்பது ஒன்றிலிருந்து ஒன்று பரம்பரையாக வருவது. 'பரவுதல்' என்பது எல்லோருக்கும் புலப்படும் வண்ணம் நிற்பது. 'மரபு' என்பதற்கு அறிவியல் ரீதியான விளக்கம் உண்டு. 'மரபு' அல்லது 'பாரம்பரியம்'

(heredity) எனப்படுவது உடல் அல்லது மனம் சார்ந்த பண்புகள் பெற்றோரிடமிருந்து பிள்ளைக்குச் சென்றடையும் நடைமுறைப்பாங்கு. மரபுத் தொடர்ச்சி: மரபுவழி: பாரம்பரியம் கடத்தப்படும் செயல்முறையாகும் (Murugan. 2009). உயிரியலில் மரபு பற்றிய கல்வி மரபியல் எனப்படும். பாரம்பரிய இயல்புகள் சந்ததிகளின் ஊடாகக் கடத்தப்படும்போது உயிரினங்கள் தமது வாழ்வைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் அவற்றில் ஏற்படக்கூடிய மரபியல் வேறுபாடுகளாலும் (genetic variation), அவற்றில் நிகழும் இயற்கைத்தேர்வுச் செயல்முறைகளாலும், உயிரினங்களில் கூர்ப்பு நிகழ்வதைத் தனது படிவளர்ச்சிக்கொள்கை மூலம் சார்லஸ் டார்வின் 1859-ல் விளக்கினார். மேற்கூறிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பார்ப்போமேயானால் தமிழர்களின் மரபு இரண்டு நிலைகளில் மட்டும் கடத்தப்பட்டுள்ளது. 1. உயிர்களின் (காமம்) காதல், 2. 'வலிமையுள்ளதே பிழைக்கும்' என்ற கோட்பாட்டின்படி வீரம்.

மேற்கூறிய இரு மரபுகள் தமிழ்க் குடிகளின் வழித்தோன்றல்களிடம் படிந்திருந்த படிமநிலை எனலாம். அவ்வகையில் காதலும் வீரமும் போற்றப்பட்டன. தமிழ் மூதாதையர்களின் வழியில் தோன்றிய எக்குழுவினராயினும் அவர்கள் காதலையும் வீரத்தையும் போற்றினர். சங்கத்தமிழ்மொழி இவ்விரண்டையும் போற்றியதன் பின்னணியும் இதுதான். தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு மாதிரியான அமைப்புமுறைகள், இலக்கணவரைமுறைகள், அணி அமைப்புகள், சந்தஅமைப்புகள், உள்ளடக்கம், உத்திகள் என மாறுபட்டே வந்துள்ளன. இம்மாறுபாடுகள் இயற்கையாக நிகழவில்லை. பல்வேறு தாக்கத்தினால் நிகழ்ந்ததாகவே கருதவேண்டியுள்ளது. ஆனால், பண்டைய இலக்கியங்கள் எவற்றைத் தமிழ் மரபுகள் என வரையறை செய்தனவோ அவற்றைத் தவறாமல் பின்பற்றிப் புத்திலக்கியங்களைப் படைத்தனர். காலத்தின் மாற்றத்தால் இலக்கிய பாரம்பரியம், மரபு உணர்வு பற்றிய பிரக்ஞை முறைமை ஆகியவை இத்தகைய சூழலில் வேறுபடுவது இயல்பு (Sivathambi, 1998). ஒரு நாட்டினம் தன்னை உயர்வாகக் காட்டிட என இருப்பது மொழியாகும். எனவே, தமிழர்கள் மொழிமூலம் மரபுணர்வுகளை வெளிப்படுத்தினர்.

'பண்பாடு' என்பது மரபு நிலையிலிருந்து வேறுபட்டது. தமிழர்களின் சமூக வரலாறு தொடர்ச்சியாகக் கிடைத்திருக்கும் என்றால் பண்பாட்டின் சிறப்புக்கூறுகள் இலக்கியம் அல்லாத பிறவழிகளில் வெளிப்பட்டிருக்க வாய்ப்புண்டு. இன்றைய நிலையிலும்கூடத் தமிழர்களது வரலாறு புரிந்தபாடில்லை அல்லது பழந்தமிழர்களைப் பற்றிய வரலாறு கிடைத்தபாடில்லை. ஆதலின் அவர்களது இலக்கியம், மொழி ஆகியவற்றின் துணைக்கொண்டு அவர்களின் வரலாற்றை அறியவேண்டியாகிறது (Elakkuvanar, 1968). தமிழரின் மொழியைப் பொருத்தமட்டில் 'பண்பாடு' என்ற சொல் பிரிந்தநிலையில் கிடந்து, இணைந்த நிலையில் ஒற்றைப் பொருளைத்தரும் ஒரு சொல் என்பது பலருக்கும் புரியாத ஒன்றாகும். தமிழகத்தில் 'பண்பாடு' என்ற சொல்லின் நுட்பப்பொருள் என்ன என்பதற்குக் குறிப்பிட்ட காலம்வரையில் சரியான விளக்கமில்லை. அதற்கேற்றாற்போல ஒவ்வொருவரும் அவரவருக்கு இணக்கமானப் பொருள்விளக்கங்களைக் கொடுத்தனர் அல்லது விளங்கிக்கொண்டனர். சமூகவியல் (Sociology) மற்றும் மானுடவியல் (Anthropology) துறைகளில் 'பண்பாடு' என்பது வழிவழியாக எல்லா நிலைகளிலும் பின்பற்றப்படும் உயர்ந்த செயல்பாடுகள் என்று வரையறுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது (Veeramurugan, 2007). 'பண்பாடு' (Culture) என்ற சொல் நேரடியாகச் சங்க இலக்கியங்களில் இடம்பெறவில்லை என்றாலும் 'பண்பு' என்ற சொல் நமது இலக்கியங்களில் பரவலாக இடம்பெறுகிறது

'இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி' (தொல். உயிரி.2), 'பாடறிந்தொழுகும் பண்பினோரே' (புறம்.197), 'ஒத்த பண்பினரொன்பது மன்னர்' (சிலம்பு.27:119) 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' (கலி.133) இவற்றில் வரும் 'பண்பு' என்பதன் பொருள் 'குணம்' என்பதை குறிப்பதாகும். 'பண்பாடு' என்பதை விளக்கமுற்படும்போது மனிதன் பேசும்மொழி, அணியும் ஆடை, உண்ணும் உணவு, வாழும்முறை, செய்யும் பணி, எண்ணங்கள் ஆகியன சமுதாயத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வாயில்கள் என்கிறார் (Balasubramanian, 2022). மனிதனின் பண்பு (குணம்) மேற்கூறியவற்றோடு இணைந்து தொடர்ச்சியாக வெளிப்படும் என்றால் அதுவே 'பண்பாடு' என்பதாகிறது. பண்பாடு என்ற சொல் எவற்றைப் பொருள்படுத்துகின்றதோ அதனை மேற்கூறிய பாடல்களில் வரும் 'பண்பு' என்ற சொல் பொருள்படுத்துகின்றது எனலாம். மேலும் 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்ற

கலித்தொகையின் வரியை ‘பண்பாடு எனப்படுவது அறிந்து ஒழுகுதல்’ எனக்கொண்டால் பண்பாடென்ற சொல்லை (பண்பு + பாடு) கலித்தொகை ஆசிரியர் பிரித்துப் பொருள்படுத்தியுள்ளார் என்பதே உண்மையாகும். மேலும் ‘பண்பு’ என்ற சொல்லுக்கு ‘அறிவால் உணரப்படும் குணம்’ என் சேனாவரையர் விளக்குகிறார். இது தனி மனிதன் சார்ந்த செயல்பாட்டுச் சொல்லெனக் கருதலாம். மேலும் உணர்வின் அடிப்படைத் தொகுப்பெனவும் கருத இடமுண்டு.

‘பண்பாடு’என்ற சொல்லைக் கையாண்ட டி.கே. சிதம்பரநாத முதலியார் அதனை ‘Culture’ என்ற ஆங்கிலச் சொல்லோடு நேர்ப்படுத்துகிறார். ‘Culture’ என்ற சொல்லுக்கு ‘நாகரீகம்’ என்ற பொருள்படும்படி மேலைநாட்டினர் தற்பொழுது கையாளுகின்றனர். மேலைநாட்டு அறிஞர் ரூத் பெனடிக்ட் என்பவர் ‘Patterns of Culture’ என்ற நூலில் ‘ஒவ்வொரு பண்பாடும் அதற்கேயுரிய செயல் நோக்கங்களைக்கொண்டு விளங்குகின்றன. மற்ற சமுதாயங்கள் இதனை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதில்லை. ஒரு குழவினரின் செயல், நோக்கங்கள் அவர்களின் அனுபவங்கள் எவ்வாறு வலிமை பெறுகிறதோ அவ்வளவும் ஒன்றுக்கொன்று பொருத்தம் பெற்று அமைகின்றன என்கிறார் (Benedict, 1959). இவ்விளக்கத்தை மேலைநாட்டினர் பலரும் ஏற்றுக்கொள்வதில்லை. காரணம், பண்பாட்டிற்கும் நாகரீகத்திற்கும் அடிப்படை வேற்றுமைகள் உண்டு. ‘Culture’ என்ற சொல்லுக்குப் ‘பண்பாடு’ என்ற சொல் அவ்வளவாகப் பொருந்தாது ‘Culture’ என்ற ஆங்கிலச்சொல் பேக்கன் என்பவரால் 1561-க்குப் பிறகுதான் உருவாக்கப்பட்டதாக எமர்சன் தனது நூலில் குறிப்பிடுவதாகக் குர்யே குறிப்பிடுகிறார் (Curye, 1947). பழந்தமிழர்களின் ‘பண்பு’ என்ற சொல்லின் பொருளாக வண்ணம், வடிவு, அளவு, சுவை என்னும் நாற்குணம், இயல்பு, மனத்தன்மை, பிறர் இயல்பை அறிந்து நடக்கும் நற்குணம், விதம், பண்புப்பெயர், அழகு, முறை, செய்கை என்றெல்லாம் விளக்கங்கள் தரப்படுகின்றன. மேலும், தொழில் நுட்பம், பொருளாதாரம், சமூக அமைப்பு, சமயம், மொழி, கலைகள், உணவு, உடை போன்றவற்றின் அடிப்படைப் பொருண்மையாகவும் கொள்ளமுடியும் (Kailasapathy, 1966). இவ்வாறான பொருண்மை அடிப்படையில் பண்பாட்டுக் கூறுகளைப் பேசும் பழந்தமிழ்இலக்கியங்கள் தமிழில் நிறைந்திருக்கின்றன. அதேநிலையில் நாகரீகம் என்ற சொல்லும் இலக்கியங்களில் பரவலாகக் கையாளப்பட்டிருப்பதும் காணக்கிடைப்பதாகும்.

‘நஞ்சும் உண்பர் நனிநாகரீகர்’ (நற்.355),

‘பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க

நாகரீகம் வேண்டு பவர்’ (குறள். கண்ணோட்டம்.10).

மேலும், 'நாகரீகம்' என்பது தனிமனிதச் செயல்பாட்டையும், 'பண்பாடு' என்பது இத்தகைய தனிமனிதச் செயல்பாடுகள் ஒட்டுமொத்தமான சமூகத்திற்கும் பொருந்துமாறு பொதுமைப்படுத்தப்படுவதையும் குறிப்பிடுவதாகக் கருதலாம். தமிழ்மொழிப் பண்பாட்டுத்தளத்திலே செயல்பட்ட காரணத்தினால் மொழியின்மீது இயற்கையாகவே பற்றுணர்வு ஏற்படக் காரணமாயிற்று' என குறிப்பிடுவதிலிருந்து தமிழ்ப்புலவர்கள் தமிழினத்தின் பண்பாட்டுச் செயல்பாடுகளைப் ‘பண்பு’ என்ற தளத்தில் நின்று இலக்கியங்களில் பேசியுள்ளனர் என்பதை அறியலாம் (Ammankili, 2006).

## பத்துப்பாட்டில் வெளிப்படும் மரபும் பண்பாடும்

தமிழில் இலக்கியமும் இலக்கணமும் உண்டான காலம் யாது என்று வரையறுத்துக் கூறல் இயலாது (Elakkuvanar, 1968). பிற்காலத்தில் அறிஞர்கள் சங்ககாலத் தமிழ் இலக்கியங்களை இருபெரும் தொகுதிகளாப் பிரித்தனர். அவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பனவாகும். எட்டுத் தொகை குறுகிய அடிவரையறை கொண்ட பாடல்களைக் கொண்டது. இதில் காதல்மரபுகளைப் பாடுதற்கு ஏற்ற வகையில் சொற்சுருக்கங்களைக் கொண்டு உள்ளுறை உவமம், இறைச்சி எனும் இலக்கிய நுட்பங்களுடன் பாடல்கள் எழுதப்பட்டன. மேலோட்டமாகப் படிப்பவரின் மனதில் ஒரு வகை கருத்தும், ஆழமாக விளங்கிக்கொண்டு படிப்பவர்களின் மனத்தில் மாறுபட்ட விதத்திலான கருத்துக்களும் புலனாகும்படி அகஇலக்கியப்பாடல்கள் அமைக்கப்பட்டன. இது மரபுசார் கருத்துருக்களை வெளிக்கொணர்ந்த மொழிப்பண்பாடு எனச் சொல்ல இடமுண்டு. அகக்கருத்துக்களை சொல்லுகின்றபோது காதல் சார்ந்த பண்பாட்டுப் பரிவர்த்தனைகளே இடம்பெறும். *‘சுட்டியொருவர்*

*பெயர்கொளப் பெறார்'* என்பது அகமரபின் (காதல், காமம்) வெளிப்பாடு. காதல் உணர்வுகளைச் சொல்லுதல் (இருவர்க்கு மட்டுமே பொருந்தக்கூடியது) என்பது தற்பொழுது வரையுள்ள மரபுணர்வு. காதல் மரபுணர்வில் 'பண்பாடு' என்ற தளம் இயங்க முடியாது என்று அறிவுணர்ந்தவர்கள் சுருங்கச் சொல்லும் நயங்களைக் கையாண்டனர். அதுவே சங்க அகப்பாடல்களின் மரபாக நின்றது. எனவே, காதல் மரபினால் ஏற்படும் பண்பாட்டுப் பரிவர்த்தனைகள் இலக்கிய எல்லைகளுக்குள் மட்டுமே பரந்துவிரிந்து அழகுணர்ச்சியைத் தோற்றுவிக்கின்றது. மேலும் அகப்பாடல் மரபு 'கூற்று' என்ற கோட்பாட்டை நிறுவிக் கூற்றிற்குரியவர்களையும் நியமித்து எல்லை அமைத்து விடுகிறது. இந்த இலக்கியஎல்லை நிலங்களால் வேறுபட்டிருந்தாலும் அகமரபைப் போற்றுவதில் ஒன்றுபட்டது. எனவேதான், தமிழகவரலாறு மூவேந்தர் வரலாற்றைப் பேசினாலும் தனித்தனிப் பண்பாடுகள் அவர்களிடம் இல்லை 'தமிழர் பண்பாடு' ஒன்றே தமிழ்நாட்டில் நிலவியது (Appadurai, 1956). என்ற கருத்தின் வழியில் நின்று தமிழ்ச்சமூகத்தின் அகமரபு போற்றும் ஒற்றைப் பண்பாட்டை அறியமுடிகிறது.

வெளிஉலகம் அறியும் படியான தமிழர்களின் வரலாற்றுக்காலம் சங்ககாலமாகும். இக்காலம் என்பது தமிழிலக்கிய, மொழி, பண்பாட்டு வரலாற்றில் முதல் வரலாற்றுக்காலம் அகமரபையும் புறமரபையும் பாடுதற்கு ஏற்பட்ட காலம் (Jayaraman, 1979). இக்காலத்தின் இறுதியில் உருவான பத்துப்பாட்டு நீண்டபாடல்களைக் கொண்டதாகும். திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை என்பனவற்றைப் பத்துப்பாட்டாகக் கொள்ளப்படும் மரபு என்பது 9-10ஆம் நூற்றாண்டுகளில் பின்பற்றப்பட்டது என்ற சிவத்தம்பியின் கருத்தினை மேற்கோள் காட்டுகிறார் மாதையன் (Madhaiyan, 2013). வையாபுரிப்பிள்ளையவர்கள் கீழ்க்கண்டவாறு பத்துப்பாட்டு நூல்களைப் பாடுபொருள் அடிப்படையில் பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு. சிறுபாணாற்றுப்படை, திருமுருகாற்றுப்படை என வரிசைப்படுத்துகிறார் (Vaiyapurippillai,1952). பத்துப்பாட்டு 'காதல்மரபுகளை'ச் சுருங்கச்சொல்லும் பாங்கில் அமையாது எல்லோருக்கும் புலப்படும் வகையிலே கருத்துக்களைப் பரவலாக வெளிப்படுத்தும் பாங்கில் அமைகிறது. குறிப்பாகப் 'போர் மரபை' முன்னெடுக்கிறது. 'போர்மரபு' யாருக்கும் தெரியாமல் நடக்கும் நிகழ்ச்சியைப் பற்றியது அல்ல. ஒருவனின் வீரம், கொடை, புறம்சார் செயல்பாடுகள் அனைத்தையும் வெளிப்படுத்தி நிற்பதாகும். அந்நோக்கில் பத்துப்பாட்டின் 'பண்பாட்டு மரபு' வெளிப்படுகிறது. பத்துப்பாடல்களும் காலத்தால் வேறுபட்டிருந்தாலும் அக்காலத் தமிழரின் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தத் தவறவில்லை. பழந்தமிழ் இலக்கியங்கள் திணை இலக்கிய வகைமைகளாக போற்றப்பட்டக் காலமது. அகமரபு, புறமரபு என உருவாக்கி வகைபடுத்தித் தொகுத்தகாலம். அகப்பாடல் மரபு என்பது 'பெயர் சுட்டாமையை' நெறியாகக் கொண்டது. களவு, கற்பு சார்ந்த காதலைப் பாடுதல் தமிழரின் இலக்கியப் பண்பாட்டில் முதன்மையானதாக நின்றது. குறும்பாடல்களின் தொகுதியாக உள்ள எட்டுத்தொகையில் காதற்பாடல்கள் அக ஒழுக்கப் பண்பாட்டை வெளிப்படுத்தின. இவற்றைச் சாதாரண மக்களால் படித்துப் புரிந்துகொள்ளுதல் முடியாத காரியம். படித்த மக்களால் மட்டுமே புரிந்துகொள்ளும்படி அமைந்த அகப்பாடல்கள் கடினத்தன்மை வாய்ந்தவையாகவும் அவை சொல்லுக்குள் பொருள் பொதிந்து, பல்வேறு பொருண்மைகளை உணர்த்தும் வடிவிலும் அமைக்கப்பெற்றன. இச்செறிவானது வரலாற்றைப் பேசுவதற்குத் தகுதியானதன்று. மேலும், இவற்றில் வெளிப்படையான வரலாற்றுச் செய்திகளைச் சொல்வதாகாது என்பதாலேயே 'சுட்டி ஒருவர் பெயர்கொளப்பெறார்' என அறுதியிட்டு அதற்கேற்ற வடிவமாகக் குறும்பாக்களை வடிப்பது இலக்கிய மரபானது. ஆனால், இலக்கியத் தொகைகளில் பத்துப்பாட்டு நெடும் பாடல்களாலான அமைப்பினைக் கொண்டது. நெடும்பாடலில் பல்வேறு செய்திகளைப் பல கோணங்களிலும் சொல்லமுடியும் என்பதால் அக்காலப் புலவர்கள் எல்லைவரையறையற்றுப் பண்பாட்டின் கூறுகளை வெளிப்படுத்தினர். அதனாலேயே தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டுக்கூறுகளைப் பத்துப்பாட்டு இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன எனலாம்.

காலவரிசையில் முதன்மையானதாக ஏற்றுக்கொள்ளப்படும் பொருநராற்றுப்படை இசைப்பண்பாட்டின் நுட்பத்தைப் வெளிப்படுத்துகிறது (1-24). தமிழர்களின் விருந்தோம்பல் பண்பு

யாவர்க்கும் பொது என்பதை (74-89) கூறுகிறது. தமிழர்களின் போர்குணம் மரபு சார்ந்தது என்பதைக் கரிகாலன் வழி விளக்குகிறது (149-150). பெரும்பாணாற்றுப்படையில் இசைக்கருவியின் தனித்தன்மை பேசப்படுகிறது (1-15). வணிகம் (46-65). வேட்டைத்தொழில் (106-117). வேளாண்மைத்தொழில் (206-242). நிலங்களின் தொழில்வளம் (134-147, 197-201, 243-256) போற்றப்படுகின்றன. பட்டின மக்களின் விருந்தோம்பல் (337-345) கடற்கரையின் சிறப்பு (346-351) கடற்கரை நகரின் சிறப்பு (442-435) பட்டியலிடப்படுகின்றன.

குறிஞ்சிப்பாட்டு 'அறத்தொடுநிற்றல்' என்ற துறையின் வழித் தலைவியினுடைய களவுவாழ்வை எடுத்துக்கூறும் பாட்டாக எழுதப்பட்டுள்ளது. ஒருவன் தமிழ் கற்கவேண்டும் என்றால் அகப்பாட்டின் வழிக்கூடக் கற்றுக்கொள்ளவும், கற்றுத்தரவும் முடியும் என்பதைப் புலப்படுத்தும்படி புலவர் பாடியதாகக் குறிப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. இது இயற்கைச் சூழலைப் போற்றும் பண்பினூடே (62-97) அகம் சார்ந்த களவு வாழ்க்கைப் பண்பை (1-8) ஒருமித்த அன்பின் பெருமையைத் (13-26) தலைவன் 'முறைப்படி உன்னை மணப்பேன்' எனச் சூளுரைத்தல் எனும் நேர்க்குணத்தைக் (200-210) களவு வாழ்வைக் கற்பு வாழ்வாக மாற்றும் பண்பு நிலைகளைப் பேசுதல் காணலாம்.

மலைபடுகடாம் கூத்தரின் நெறிகளை (1-20) விவரிக்கின்றது. பேரியாழின் இயல்பு (20-37) நன்னன் என்ற மன்னனின் கொடை இயல்புகள் (67-89) ஆகியவற்றைப் பேசுவதோடு, சிவவழிபாடு (225-233) விருந்தோம்பல் (404-420, 434-448, 449-497) ஆகிய பண்பு நிலைகளை விவரிக்கின்றது.

சங்கத் தொகைப்பாக்களில் மிக நீண்டகவிதையாக உள்ள மதுரைக்காஞ்சி 'அரசர் கவிதை' என்பதற்கு ஏற்றவாறு 'தமிழ்ப் பண்பாட்டின் காவலன்' என்றழைக்கப்படுகின்ற பாண்டியனின் குலப்பெருமை, செங்கோண்மை, போர்ச்சிறப்பு (1-35) ஆகியவற்றை விவிரிக்கின்றது. மேலும் நிலையாமையின் தன்மையை (210-237) வலியுறுத்துகின்ற நூலாகவும் இது அமைகிறது. ஐவகை நிலங்களின் தன்மை, சமயப்பொதுமை, வணிகர்களின் சிறப்பு, தூங்கா நகரின் சிறப்பு (238-326, 621-699) எனத் தென்தமிழகத்தின் பண்பாட்டுக் கூறுகளைப் படம்பிடிக்கிறது.

உலகில் உண்மை புரிந்து, உரமாகக் கடனாற்றுதற்கும், நில்லா உலகில் நிலைபெற வாழமுடியும் என்பதைப் புகழால் நிலைநாட்டுதற்குமேயாம். 'நிலையாமையைக் கூறி வீடுபேற்றைப் பாடுவது' என்பது இதற்கு உரைவழங்கிய பேராசிரியரின் கருத்தாகும் (Ilankumaran, 2003). மதுரைக்காஞ்சியிலுள்ள 'வஞ்சினக்காஞ்சி', 'மகட்பாற்காஞ்சி' போன்ற செயற்பாடுகள் 'நிலையாமை' என்பது வாழ்வில் இருந்தாலும் அந்த நிலையாமைக்குள் இருக்கும் வாழ்வை நினைத்து இன்புற்று வாழ்ந்துகொள் என அரசனுக்குக் கூறுவதாகக் கொள்ளலாம் என்ற நேர்மறைச் சிந்தனை மதுரைக்காஞ்சியில் வலியுறுத்தப்படுகிறது.

அகப்பாட்டில் 'பெயரைச் சுட்டிக் காட்டக்கூடாது' என்பது பொதுவிதியாதலின் அதனைச் சுட்டிக்காட்டி இந்நூலில் வரும் 'வேம்பு தலையாத்த' என்ற தொடரில் 'வேப்பம்பூ' பாண்டிய மன்னனைக் குறிக்கிறது. எனவே, இது 'புறப்பாட்டு' என்று முடிவு செய்யும் நிலையில் தொன்னூற்றொன்பது விழுக்காடு அகச்செய்திகளைப் பேசியபின் ஒரு விழுக்காடு புறச்செய்தியைப் பேசுவதாக அமையும் நெடுநல்வாடை இலக்கியத்தில் புதிய கோணத்தில் எழுதப்பட்ட நூல் என்று நாமறிந்து கொள்ள வேண்டும்.

முல்லைப்பாட்டு முறையே அகம் சார்ந்த செய்திகளையும் (1-23, 80-89) புறம்சார்ந்த செய்திகளையும் (24-44, 50-58, 77-79) ஒருங்கே பெற்றுத் தனித்தன்மையான நூலாக விளங்குகின்றது. குறிசொல்லும் பெண்டிர் இருந்ததையும் அவர்களின் வாக்கு நல்வாக்காக அமையும் என்று மக்கள் நம்பினார்கள் என்பதையும் இந்நூலின் வாயிலாக அறியமுடிகிறது.

சிறுபாணாற்றுப்படையில், குறுநில மன்னர்களான கடையேழு வள்ளல்களின் சிறப்பு என்பது பேரரசு கண்ட மன்னர்களுக்கு இணையானது என்பதை நல்லியக்கோடனின் தலைமைப் பண்பை விவரிப்பதன்மூலம் (126-144) அறியமுடியும். இப்படி நாடு, நகரம், மக்கள், தொழில், உணவு எனத் தமிழ்ப் பண்பாட்டின் மரபுசார் கூறுகளை நிறுவ முயல்கின்றது. அதனால்தான் அதனை 'சமுதாயப்பாட்டு' எனத் தமிழ் அறிஞர்கள் அடையிட்டுக் கூறுகின்றனர் என்பதும் அறியத்தக்கது.

சைவத்திருமுறைகளுள் 11-ஆம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டுள்ள திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டு நூல்வரிசையில் காலத்தால் பிந்திய நூலாக அமையப்பெற்றுள்ளது. தமிழ்க்கடவுளாகச் சித்தரிக்கப்படும் முருகப் பெருமானின் அறுபடைவீடுகளைப் பற்றிய செய்திகள் இதில் கூறப்பெற்றுள்ளன. தமிழகத்தின் பக்திப்பண்பு முருகனைச் சார்ந்தது என இந்நூல் விவரிக்கின்றது.

முருகனை வழிபடும் முறைகளை இந்நூல் எடுத்துரைக்கின்றது (218-220) உயிர்ப்பலியிட்டு வழிபடும் வழக்கம் இருந்ததையும் இந்நூல் சுட்டுகிறது (232-234) திருமாலையும், சிவனையும் வழிபட்ட நிலைகளையும் இந்திரன், பிரம்மன் ஆகியோர்களின் வழிபாடு இருந்ததையும் காணமுடிகிறது (150-151, 154-159, 164-165) ஆனால், இதில் முழுவதும் தமிழரின் சமயப்பண்புகளே உள்ளன என்பதைக் கூறிவிடமுடியாது. ஆரியக்கலப்பு மிகுந்த செயல்முறைகளும் வழிபாட்டு நெறிகளுமாகத் தமிழரின் சமயப்பண்பாட்டு முறைகள் உள்ளன (254-257). இதிலிருந்து தமிழர் சமயம் பற்றிய பண்பாட்டுச் செய்திகளைப் பிரித்தெடுப்பதன் மூலம் தமிழரின் சமயப்பண்பாடு என்ன என்பதை அறியலாம். இதில் சமயப் பண்பாட்டின் முதல்வடிவமாக முருகன் சித்திரிக்கப்பட்டதன் வழி நமது சமயப்பண்பாட்டின் துவக்கம் முருகனிடமிருந்தே தொடங்குகிறது எனலாம்.

## முடிவுரை

பத்துப்பாட்டு தமிழர் மரபினை ஒவ்வொரு இடத்திலும் புகுத்திக்காட்டி எழுதப்பட்ட நூற்தொகுப்பு. நீண்ட வரிகளைக் கொண்ட இந்நூல்கள் தமிழர்களின் ஆழ்மனத்தில் பதிந்திருக்கும் மரபின் படிமங்களைப் பண்பாட்டுக் குறியீடுகளில் வெளிப்படுத்தியிருக்கின்றன. மொழி, காதல், போர் நெறிகள், கலைகள், உணவு, உடை, கடவுள், வீரம், வழிபாடு, தொழில்நுட்பமுறைகள், உணவுமுறைகள் ஆகியவற்றின் பரிமாணங்களைத் வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு நூலும் அதனதன் சூழலில் இருக்கும் செயல்பாடுகளைச் செய்திகளாக்குகின்றன. இவை அனைத்தையும் ஒன்றிணைத்தால் தமிழர்களின் மரபுசார் பண்பாட்டு மூலங்கள் வெளிப்படும். இவையனைத்தையும் பொதுமைப்படுத்திப் பண்பாட்டு அடித்தளத்தை இலக்கியங்கள் கட்டமைக்கின்றன. பத்துப்பாட்டு நூல்கள் அகம், புறம் பேசுபவை. அகமரபில் காதல், உறவுகள் போன்றவற்றை வரையறைப்படுத்துகின்றன. புறமரபில் தொழில், தொழில்நுட்பம், போர், நகரம், போக்குவரத்து, விருந்தோம்பல், இசை, நாட்டியம், நாடகம், மக்கள், விலங்கு, பறவை, சூழல், இரவு, பகல், தெய்வம், போன்றவற்றை வரையறை செய்கின்றன. புறமரபில் இருப்பவை அகச்சூழலில் பங்கெடுத்தாலும் அவை குறியீட்டுடன் சுருக்கம் பெற்றுவிடும். ஆனால் நீண்ட அடிகளைக் கொண்ட இலக்கியங்களில் சொல்லவந்ததை விவரித்துவிட்டுப் புலவர்கள் செல்லும்போது அதிகப்படியான செய்திகள் பதிவாகும். அப்பொழுது இயல்பான மனித மரபு, பண்புநலன் அவற்றினூடே வெளிப்படும். இதைத்தான் பத்துப்பாட்டு நூல்கள் தவறாமல் செய்திருக்கின்றன. அறிஞர்கள் அவற்றைப் பின்னாளில் தொகுக்க முற்பட்டபோது இக்கருத்தை உள்வைத்து தொகுத்திருக்க வாய்ப்புண்டு என்பதை இலக்கிய ஆதாரங்களின் வழி அறியமுடியும்.

## References

Ammankili, M., (2006) Sanga Kavithai Iyakkam Marabum Maatramum, Kumaran Press, Srilanka.

Appadurai, K., (1956) Thenmozhi, Malar Nilaiyam, Chennai, India.

Balasubramanian, K.V., (2022) Panpattu varalaru-1, Tamil Virtual Academy, Chennai, India.

Elakkuvanar, C., (1968) Pazhanthamizh, Valluvar Pathippagam, Pudukkottai, India.

Govind Sadasiv, C., (1947) Culture and Society, North Riding Record Society, Oxford University Press, Bombay, India.

Ilankumaran, R., (2003) Tholkappiyam Porulathikaram, Tamilmann Pathippagam, Chennai, India.

Jayaraman, N., (1979) Tamil Ilakkiya Nerigal, Kumaran Pathippagam, Madurai, India.

Kailasapathy, (1966) Pandai tamilar valvum valipadum, Paari Nilaiyam, Chennai, India.

Kamil Zvalabil, V., (1973) The Smile of Murugan on Tamil Literature of South India, International Institute of Tamil Studies, Chennai, India.

Madhaiyan, P., (2013) Sangam Kavithaiyiyal, Raasaguna Pathippagam, Chennai, India.

Mohan, R., Sokkalingam, N., (1985) Urai Marappukal, Manivaasagar Pathippagam, Chidambaram, India.

Mounaguru, C., (2005) Thamizhar Varalarum Panpaadum Therinthathum Theriyathathum, Kumaran Press, Srilanka.

Nandhivarman, (2010) Kadalil tamilar nagarigam, International Institute of Tamil Studies, Chennai, India.

Pathmanathan, C., (2007) Sanga Ilakkiyamum Samugamum, Hindu Religious Cultural Affairs, Srilanka.

Rasamanikkanar, M., (1947) Tamilagathin Vada Ellai, Thanjai Tamil Karanthai Sangam, Thanjai, India.

Benedict, R., (1959) Patterns of Culture, Houghton Mifflin Company, Boston, India.

Saami Sithambaranar, (1986) Pathu Pattum Pandaya Tamilarum, Paari Nilaiyam, Chennai, India.

Sivathambi, K., (1988) Tamil Ilakkiya varalaru, New Century Book House, Chennai, India.

Sivathambi, K., (1998) Pandaiya Tamil Samuga Varalatril Purithal Nokki, makkal veliyeedu, Chennai, India.

Srinivasan, R., (1997 Tamil Ilakkiya varalaru, Aniyagam, Chennai, India.

Vaanamaamalai, N., (1973) Tamilar Panpadum Thathuvamum, New Century Book House, Chennai, India

Vaiyapurippillai, S., (1952) Illakiya Deepam, Paari Nilaiyam, Chennai, India.

Veeramurugan, M., (2007), Mozhiyum Arasiyalum Viduthalaiku Pin Tamilagathil, Doctoral Dissertation, Pondicherry University, Pondicheery, India.

Venkataraman, K.G., (2008) Thamizh lakkiya Varalaru, Kalayaga veliyedu, Namakal, India.

Wilhelm Humbolt, V., (1972) Linguistic variability and Intellectual Development, University of Pennsylvania Press, USA.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License